பள்ளிக் கல்வித் துறை

# மக்கள் சாசனம்

2008-2009

©
தமிழ்நாடு அரசு
2008

# பள்ளிக் கல்வித் துறை

## மக்கள் சாசனம்

## 2008-2009

### முன்னுரை

இந்த மக்கள் சாசனம், தமிழக மக்களுக்குப் பள்ளிக் கல்வித்துறை ஆற்றும் கல்விப்பணிகள் குறித்த விவர அறிக்கை ஆகும்.

பள்ளிக்கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இயக்ககங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. தொடக்கக் கல்வி இயக்ககம்
2. பள்ளிக்கல்வி இயக்ககம்
3. மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம்
4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்
5. அரசுத் தேர்வுகள் இயக்ககம்
6. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்
7. ஆசிரியர் தேர்வு வாரியம்
8. பொது நூலக இயக்ககம்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பள்ளிக்கல்வித் துறை ஆற்றும் பணிகள் குறித்த விவரங்கள் துறை வாரியாக பின்வரும் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன.

## தொடக்கக் கல்வி இயக்ககம்

தொடக்கக் கல்வித் துறையினுடைய முக்கிய குறிக்கோள் 'அனைவருக்கும் தொடக்கக் கல்வி ' என்பதே. குழந்தைப் பருவத்தில் கல்வி அறிவு பெறுவதற்கு முதன் முதலில் பெற்றோருக்கு தொடக்கக் கல்வி துறைதான் துணை நிற்கிறது. குழந்தைகளைக் கல்வி அறிவு உள்ள குழந்தைகளாக மாற்றப் பெரிதும் உதவுவது தொடக்கக் கல்வித் துறையே. இந்த இலக்கினை அடைந்திட தொடக்கக் கல்வித் துறை உறுதி அளிக்கிறது. இதற்கென கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

1) பள்ளி வயதில் உள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல்.

2) பள்ளியில் சேர்த்த அனைத்துக் குழந்தைகளையும், இடையில் நின்று விடாமல், 8ஆம் வகுப்பு வரை அல்லது குறைந்த பட்சம் 5-ஆம் வகுப்பு வரை படிக்க வழி வகை செய்தல்.

3) 5-ஆம் வகுப்பு முடிக்கும் மாணவர்கள் குறைந்தபட்சத் திறன்களைப் பெறுவதற்கு வழிவகை செய்தல்.

மேற்கண்ட மூன்று குறிக்கோள்களையும் அடைய, தொடக்கக் கல்வித் துறையில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1) அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குதல்.
2) மாற்றுத் திறன் குழந்தைகள் கல்வி.
3) மழலையர் பள்ளிகளுக்கு ஒப்புதல் அளித்தல்.
4) இலவசப் பாடநூல்கள் வழங்குதல்.
5) இலவசச் சீருடைகள் வழங்குதல்.
6) பேருந்து இலவச அட்டை
7) பெண் கல்வி ஊக்கத் தொகை
8) திறனறி தேர்வு.
9) பெற்றோர் ஆசிரியர் கழகம்.

**அனைவருக்கும் தொடக்கக் கல்வி**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குதல் |
| திட்டத்தின் குறிக்கோள் | பள்ளி வயதுக் குழந்தைகள் அவைருக்கும் கல்வி வழங்குதல் |
| பயன்பெறுபவர் | பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும். |
| தகுதிகள் | அ) ஜுலை 31ஆம் தேதி 5 வயது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| | ஆ) 30 நாட்கள் வரை குறைவு பட்டால் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் தவிர்ப்பு வழங்கலாம். |
| சிறப்புச் சலுகை | முறையான கல்வி பயிலாத மாணவ/ மாணவியர்கள் தனிப்படிப்பு மூலம் அங்கீகாரம் பெற்ற பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை சேரலாம். இதற்குக் |

| | |
|---|---|
| | கீழ்க்காணும் தகுதிகள் தேவை. |
| | அ) தகுதி பெற்ற மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியரிடம் பயின்றதற்கான சான்று. |
| | ஆ) பிறந்த தேதி சான்று |
| | இ) சாதிச் சான்று |
| | ஈ) மாணவர்கள் இதற்கு முன்பு எந்த அங்கீகாரம் பெற்ற பள்ளியிலும் பயிலவில்லை என்பதற்கான பெற்றோரின் உறுதிமொழிச் சான்று |
| | மேற்கண்ட ஆவணங்களைப் பரிசீலித்து தலைமை ஆசிரியர் தேர்வு நடத்தி தகுதி பெற்ற மாணவர்களுக்கு உரிய அலுவலரிடம் ஒப்புதல் பெற்று மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கிறார். |
| அணுகவேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமை ஆசிரியர் |
| விண்ணப்பிக்க வேண்டி காலம் | ஜூன் மாதம் |
| குறைபாடு இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | ஒன்றிய அளவில்<br>உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்.<br>மாவட்ட அளவில்<br>மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்<br>மாநில அளவில்<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28271169. |
| | தொடக்கக் கல்வி இணை இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186 |

**இலவச சீருடை வழங்குதல்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலவசச் சீருடை வழங்குதல் |
| குறிக்கோள் | பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்குதல் |
| வழங்கப்படும் உதவி | ஆண்டிற்கு ஒரு முறை ஒரு ஜோடி சீருடை வழங்குதல் |
| பயன் பெறுபவர் | 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவர் / மாணவியர்கள். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | ஒன்றிய அளவில்<br>உதவித் தொடக்கக் கல்வி அலுவலர். |

| | |
|---|---|
| | மாவட்ட அளவில்<br>மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்<br><br>மாநில அளவில்<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28271169. |
| | தொடக்கக் கல்வி இணை இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186 |

**இலவசப் பாடநூல்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலவசப் பாடநூல் வழங்குதல் |
| குறிக்கோள் | பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்குதல் |
| வழங்கப்படும் உதவி | ஆண்டிற்கு ஒரு முறை அனைத்துப் பாடநூல்களும். |
| பயன் பெறுபவர் | 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர் / மாணவியர்கள் |
| வழங்கப்படும் காலம் | ஜுன் மாதம் பள்ளி திறந்தவுடன் முதல் நாள். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | ஒன்றிய அளவில்<br>உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்.<br><br>மாவட்ட அளவில்<br>மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்<br><br>மாநில அளவில்<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28271169. |
| | தொடக்கக் கல்வி இணை இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186 |

**மழலையர் பள்ளிகள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மழலையர் பள்ளிகளுக்கு ஒப்புதல் அளித்தல் |
| நிபந்தனைகள் | அ) பதிவுக் கட்டணமாக ரூ.500/- கருவூலத்தில் செலுத்த வேண்டும்.<br>ஆ) அரசு மான்யம் எதுவும் கிடையாது.<br>இ) ஆசிரியர்களது ஒரு மாத ஊதியத்தை வங்கியில் சிறுசேமிப்பில் பள்ளியின் பெயரில் செலுத்த வேண்டும்.<br>ஈ) பள்ளிக்குப் போதுமான இடவசதி, |

| | |
|---|---|
| | தளவாடங்கள், சுகாதார வசதிகள், விளையாட்டு இடங்கள் இருத்தல் வேண்டும்.சுகாதார அலுவலர் சான்று பெறவேண்டும்<br><br>உ) பள்ளிக் கட்டிட உறுதிச் சான்றிதழ் பொதுப் பணித்துறைப் பொறியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட் பொறியாளர் அவர்களிடமிருந்து பெற வேண்டும்.<br><br>ஊ) உரிமம் ‘D’, சம்மந்தப்பட்ட வட்டாட்சியர், சென்னையில் மட்டும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரிடமிருந்து பெற வேண்டும்.<br><br>எ) தீயணைப்பு மற்றும் மீட்டுத் துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெறவேண்டும்.<br><br>ஏ) ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 1 கி.மீ. சுற்றளவில் அங்கீகாரம் பெற்ற பள்ளி இருத்தல் கூடாது.<br><br>ஐ) பள்ளிக்கான கட்டளை நிதி மற்றும் புதுப்பித்தல் கட்டணம் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கருவூலத்தில் கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும். |

| மாணவர்கள் எண்ணிக்கை | கட்டளை நிதி (ரூபாயில்) | புதுப்பித்தல் |
|---|---|---|
| 1-100 | 5000 | 150 |
| 101-250 | 7500 | 250 |
| 251-500 | 15000 | 400 |
| 501- அதற்கு மேல் | 25000 | 500 |

| | |
|---|---|
| | I) தமிழ் மொழி அனைத்து நிலையிலும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும். பகுதி 3-ன் கீழ் கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய மூன்று பாடங்களில் ஏதேனும் இரண்டு பாடங்கள் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும். முற்றிலும் தமிழ் மொழியிலேயே செயல்படும் பள்ளிகளுக்கு ஏற்புக் கட்டணம் பாதியாக குறைக்கப்படும். இம்மாணவர்களுக்கு பாடநூல்கள் இலவசமாக அரசு சார்பில் வழங்கப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர். |
| முதல் ஒப்புதல் | மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர். |
| புதுப்பித்தல் | மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் |
| குறைபாடு இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | தொடக்கக் கல்வி இணை இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186. |

| | |
|---|---|
| | |

**பெண் கல்வி ஊக்குவிப்பு**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | பெண் கல்வி ஊக்குவிப்பு ஏற்படுத்துதல் |
| திட்டத்தின் குறிக்கோள் | பெண் கல்வியை ஊக்குவிக்க உதவித் தொகை வழங்குதல் |
| பயன்பெறுபவர் | 3-ஆம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர்,பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன பெண் குழந்தைகள். |
| வழங்கப்படும் உதவி | III – V ரூ. 500/- ஆண்டு ஒன்றுக்கு<br>VI - VIII ரூ.1000/- ஆண்டு ஒன்றுக்கு<br>ஆதி திராவிடர், பழங்குடியினர் / பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகள் |
| வழங்கப்படும் காலம் | கல்வி ஆண்டில் |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமை ஆசிரியர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | ஒன்றிய அளவில்<br>உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்.<br>மாவட்ட அளவில்<br>மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்<br>மாநில அளவில்<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28271169.<br>தொடக்கக் கல்வி இணை இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186 |

**திறனறி தேர்வு (Talent Exam)**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | தேசிய திறனாய்வு தேர்வு |
| திட்டத்தின் குறிக்கோள் | கல்வி வளர்ச்சி |
| வழங்கப்படும் உதவி | மாதம் ரூ. 500/-; 9-ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை |
| தகுதி | போட்டி தேர்வு எழுத 7வது வகுப்பு இறுதி தேர்வில் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவிகிதம்<br>போட்டித் தேர்வின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமை ஆசிரியர் |

| | |
|---|---|
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | மாவட்ட அளவில்<br>மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்<br><br>மாநில அளவில்<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28271169.<br><br>தொடக்கக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்),<br>கல்லூரிச் சாலை, சென்னை-6<br>தொலைபேசி எண் 28267186<br><br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை-6. |

**மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மாற்றுத் திறன் குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி |
| குறிக்கோள் | அரசு துவக்க / நடுநிலைப் பள்ளிகள் / மாற்றுப் பள்ளிகள் (AIE) மற்றும் அரசு நிதி உதவிப் பெறும் துவக்க/ நடுநிலைப் பள்ளிகளில் மாற்றுத் திறன் கொண்டுள்ள குழந்தைகளை சேர்த்து அவர்களுக்கு தரமான கல்வியினை வழங்கிடல். |
| வழங்கப்படும் உதவிகள் | மருத்துவ முகாம்கள் நடத்துதல்.<br>உதவி உபகரணங்கள் வழங்குதல்.<br>தேசிய அடையாள அட்டை பெற்றளித்தல்.<br>அறுவை சிகிச்சை உதவி, வட்டார அளவில் உள்ள IED ஆதார வள மையம் (IED Resource Rooms) மற்றும் பகல் நேர பாதுகாப்பு மையம் (Day Care Centres) ஆகிய மையங்களில் அனைத்து வகை இயலாத் தன்மை பெற்றுள்ள குழந்தைகளுக்குத் தேவையான உடற் பயிற்சிகளை தசை இயக்கப் பயிற்சி நிபுணர்கள் வாயிலாக வழங்குதல். வகுப்பறைகளில் இயலாத் தன்மை பெற்றுள்ள குழந்தைகளை கையாளும் முறைகளை பள்ளி ஆசிரியர்களுக்கு, சிறப்பு ஆசிரியர்கள் மூலம் தேவையான பயிற்சிகளை தொடர்ச்சியாக வழங்குதல். |
| பயன் பெறுபவர் | 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள். |
| அணுக வேண்டிய அலுவலர் | வட்டார அளவில்<br>வட்டார வள மைய மேற்பார்வையாளர்.<br><br>மாவட்ட அளவில்<br>மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் |

| | |
|---|---|
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் |

# பள்ளிக் கல்வி இயக்ககம்

தொடக்கக் கல்வியில் எண்ணறிவு, எழுத்தறிவு, பேசுகின்ற திறன், படிக்கின்ற திறன், இவைகளைப் பெற்று வருகின்ற மாணவர்கள் இடைநிலைக் கல்வி பருவத்தில் முழுமையான மொழியறிவும், அறிவியல் அறிவும், கணித அறிவும் பெறுகின்றனர். இவைகளை அடைவதற்கு பயிற்சி தரக்கூடிய ஒரு பருவமாக இடைநிலைக் கல்வி பருவம் அமைகிறது. தொடக்கக் கல்வி மற்றும் உயர்கல்வி இந்த இரண்டுக்குமிடையே இடைநிலைக் கல்வி பாலமாக செயல்பட்டு, 14 முதல் 18 வயது வரை உள்ள இளவயது மாணக்கர்களை அவர்கள் உயர்கல்வி பயில அல்லது பணி வாய்ப்பு பெற்றிடும் வகையில் தயார் செய்கிறது. பள்ளிக் கல்வித் துறையின் முக்கிய குறிக்கோள் அறிவு புகட்டுதல், அறிவியல் கண்ணோட்டம் பகுப்பறியும் திறன்களை மாணாக்கர்கள் அறிய செய்து அதன் மூலம் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொண்டு சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் சிறந்த குடிமகன்களாக விளங்கச் செய்வதாகும். இடைநிலைக் கல்வி பருவத்தில் செய்து கற்கின்ற ஆற்றல், ஆய்வக செயல்முறைகளைக் கூர்ந்து அறியும் நுண்ணாற்றல் மற்றும் வேதியியல், இயற்பியல், உயிரியல் பாடங்களுக்கு அடிப்படைத் துணையாக அமையும் கணித அறிவு இவைகளைப் பெறுவதற்கு இடைநிலைக் கல்வி துணை வகிக்கின்றது. 10வது தேர்வு எழுதி முடிக்கின்ற ஒரு மாணவன் மேல்நிலைக் கல்வியைத் தொடர்வதற்கான அடிப்படைத் திறன்களை எல்லாம் இந்த பருவத்தில் முழுமையாகப் பெறச் செய்வதே துறையின் கடமையாகும். முறையான கற்றல் கற்பித்தல் முறைகள், பாடத்திட்டங்களை மேம்படுத்துதல், தகுதியுள்ள மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடன் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை முழுமையான அளவில் அளித்தல் ஆகியனவற்றை துணையாக கொண்டு நல்ல தரமான கல்வி அளிக்கப்படுகிறது.

**மாணவர் சேர்க்கை :**

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கீழ்க்கண்ட இருமுறைகளில் மாணவர்களைச் சேர்க்கலாம்.

1 மாற்றுச் சான்றிதழ் மூலம் சேர்க்கை

2 தனிப்படிப்புச் சேர்க்கை

**மாற்றுச் சான்றிதழ் மூலம் சேர்க்கை :**

| | |
|---|---|
| வகுப்பு | 6-8 ; 9-10 ; 11 ஆம் வகுப்பு |
| சேர்க்கை செய்யவேண்டிய காலம் | பள்ளி திறந்த தேதி முதல் ஜூலை 31 வரை (அல்லது) அவ்வப்போது அரசால் நீட்டிக்கப்படும் தேதி வரை |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் |
| தகுதி மற்றும் தேவையான விபரம் | 1. அங்கீகரிக்கப்பட்ட தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் தொடக்க/ நடுநிலை கல்விப்படிப்பை முடித்த பிள்ளைகளை அவர்கள் படித்த பள்ளிகளிலிருந்து |

| | |
|---|---|
| | பெறப்பட்ட பதிவுத்தாள் அல்லது மாற்றுச் சான்றிதழ் அடிப்படையில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கலாம்.<br>2. 10ம் வகுப்பு மதிப்பெண் சான்று மற்றும் மாற்றுச் சான்றிதழ் அடிப்படையில் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேர்க்கலாம். |
| வயது வரம்பு மற்றும் வரம்பைத் தளர்த்துதல்: | 6 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் மாவட்டக் கல்வி அலுவலரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். 6 மாதத்திலிருந்து 12 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். |

மாநிலக் கல்வித் திட்டம் பின்பற்றப்படும் பள்ளிகளிலிருந்து மெட்ரிகுலேசன் பள்ளிக்கோ, ஆங்கிலோ இந்தியப் பள்ளிக்கோ, மெட்ரிகுலேசன் பள்ளியிலிருந்து இதரவகை பள்ளிக்கோ, ஆங்கிலோ இந்திய பள்ளியிலிருந்து இதரவகை பள்ளிக்கோ அல்லது இந்தியாவிலுள்ள இதர மாநிலத்திலுள்ள பள்ளிக்கோ செல்லும்போது, பயின்ற பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் மாற்றுச் சான்றில் மேலொப்பம் பெறப்பட்டு இருக்க வேண்டும்.

**தனிப்படிப்புச் சேர்க்கை :**

மாநிலக் கல்வித் திட்டப்படியான பள்ளிகள் / மெட்ரிகுலேசன் பள்ளிகள் / ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்

| வகுப்பு | 2ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை |
|---|---|
| சேர்க்கை செய்யவேண்டிய காலம் | பள்ளி திறந்த தேதி முதல் ஜூலை 31 வரை அல்லது அவ்வப்போது அரசால் நீட்டிக்கப்படும் தேதி வரை. |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் |
| தகுதி மற்றும் தேவையான விவரம் | 5ஆம் வகுப்புவரை அங்கீகரிக்கப்படாத பள்ளிகளிலோ, தனியாக வீட்டில் இருந்தபடியோ படித்த, பள்ளி வயது பிள்ளைகளைப் பள்ளிகளில் தனிப்படிப்பு மூலம் சேர்க்கலாம். இவ்வகைச் சேர்க்கைக்குக் கீழ்க்கண்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்.<br>1. அங்கீகரிக்கப்படாத பள்ளியில் பயின்றதற்கான சான்று / தனிப்படிப்புச் சான்று.<br>2. பிறந்த தேதிச் சான்றிதழ் |

| | |
|---|---|
| வயது வரம்பு மற்றும் வரம்பைத் தளர்த்துதல் | 1. ஜூலை 31ந் தேதிய நிலவரப்படி முதல் வகுப்பில் சேர்க்க 5 வயது முடிவு பெற்றிருக்க வேண்டும். இதேபோன்று அடுத்த வகுப்புகளுக்கு வயது கணக்கிடப்படுகிறது.<br>2. 6 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் மாவட்டக் கல்வி அலுவலரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். 6 மாதத்திலிருந்து 12 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். |

மேற்கண்ட நிலைகளில் தனிப்படிப்புச் சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் சேர்க்கை கோரும் வகுப்புக்கேற்ப தேர்வு வைத்து, அவ்வகுப்பில் சேர்க்கத் தகுதியுண்டா என்பதைப் பரிசீலித்து தகுதியுண்டு என்பதை அறிந்த பின் சேர்க்கை மேற்கொள்வார்.

**பாடத்திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட்டு அரசால் 2006 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்படி 2006-2007 ம் கல்வி ஆண்டிலிருந்து 1 ம் வகுப்பில் துவங்கி 10 ம் வகுப்பு வரை படிப்படியான முறையில் தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்பட்டு வருகிறது.

6 முதல் 10ம் வகுப்புவரை கீழ்க்கண்டவாறு பாடத்திட்டத்தில் கல்வி கற்றுத் தரப்படுகின்றது.

**அ. ஆங்கிலோ இந்தியன் பாடத்திட்டம் :**

பகுதி-1 -- தமிழ்
பகுதி-2 -- ஆங்கிலம்
பகுதி-3 -- பொதுப்பாடம் (கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் ஆங்கில வழி)
பகுதி -4 -- இதர மொழிகளில் ஒன்று விருப்பப்பாடமாக கற்றுக் கொள்ளலாம்.

**ஆ.மெட்ரிகுலேசன் பாடத்திட்டம் :**

பகுதி-1 -- தமிழ்
பகுதி-2 -- ஆங்கிலம்
பகுதி-3 -- பொதுப்பாடம் (கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் ஆங்கில வழி)
பகுதி -4 -- இதர மொழிகளில் ஒன்று விருப்பப்பாடமாக கற்றுக் கொள்ளலாம்.

**இ. மாநில பாடத் திட்டம் :**

6 முதல் 10 வகுப்பு வரை கீழ்கண்டவாறு பாடத்திட்டத்தில் கற்றுத் தரப்படுகின்றது.

பகுதி - 1 தமிழ்

பகுதி - 2 ஆங்கிலம்

பகுதி -3 பொதுப்பாடம் (கணக்கு, அறிவியல், சமூக அறிவியல்-தமிழ், ஆங்கிலம் மற்றும் இதர மொழி வழி)

10ஆம் வகுப்புவரை ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன் போன்ற பாடத்திட்டத்தில் படித்து முடித்தவர்களும், 11 ம் வகுப்பு மேல்நிலைப் படிப்பில் சேரலாம்.

**மேல்நிலைக் கல்வி :**

மேல்நிலைப் பள்ளிகளில் கீழ்கண்டவாறு பொதுப் பாடத் திட்டங்களுடன் தொழிற்கல்விப் பாடங்களும் கற்றுத் தரப்படுகின்றன.

பகுதி-1 தமிழ் (அல்லது) இதர மொழி

பகுதி-2 ஆங்கிலம்

பகுதி-3 ஒவ்வொரு பிரிவுகளிலும் 3 பாடங்கள் கட்டாயமானதாகவும் அந்தந்த பிரிவுகளில் இருக்கும் விருப்பப் பாடங்களில் ஒரு பாடத்தை 4வது பாடமாகவும் மேல்நிலை வகுப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவரும் பகுதி 3-ன்கீழ் அவசியம் படிக்கக்கூடிய வகையில் கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

பிரிவு-1 1. கணிதம் (Mathematics) 2. இயற்பியல் (Physics) 3. வேதியியல் (Chemistry))
4. விருப்பப் பாடம் (Optional Subject)/ (ஏதேனும் ஒரு பாடம்)
உயிரியல் (Biology) / கணினி அறிவியல் / (Computer Science)
புள்ளியியல்/ (Statistics) உயிர் வேதியியல்/ (Bio-Chemistry)
ஆங்கில தொடர்பியல்/ (English for Communication)
மனையியல்/ (Home Science )

பிரிவு-2 1. இயற்பியல் (Physics) 2. வேதியியல் (Chemistry) 3. உயிரியல் (Biology)
4. விருப்பப் பாடம் (Optional Subject) (ஏதேனும் ஒரு பாடம்)
நுண் உயிரியல் /(Micro Biology). /உயிர் வேதியியல்(Bio-Chemistry)/
செவிலியியல்/ (Nursing), . சத்துணவியல் (Nutrition and Dietetics)/
கணினி அறிவியல் (Computer Science). /ஆங்கில தொடர்பியல் (English for Communication), /மனையியல் (Home Science)

பிரிவு-2(ஏ) 1. இயற்பியல் (Physics) 2. வேதியியல் (Chemistry)
3.தாவரவியல் (Botany). 4. விலங்கியல்(Zoology)

பிரிவு-3 1. கணக்கு பதிவியல் (Accountancy) 2. வணிகவியல் (Commerce)

3. பொருளாதாரம் (Economics)

4. விருப்பப் பாடம் (Optional Subject) (ஏதேனும் ஒரு பாடம்)

வணிகக் கணிதம் (Business Mathematics). /

கணினி அறிவியல் (Computer Science),/ புள்ளியியல் ( Statistics)/

ஆங்கில தொடர்பியல் (English for Communication). /

வரலாறு (History) / அரசியல் அறிவியல் (Political Science ) /

அற இயல் மற்றும் இந்தியப் பண்பாடு (Ethics and Indian Culture) /

சிறப்புத் தமிழ் (Advanced Tamil)

பிரிவு-4 1. வரலாறு (History), 2.பொருளாதாரம்(Economics), 3. புவியியல் (Geography) 4. விருப்பப்பாடம் (Optional Subject) (ஏதேனும் ஒரு பாடம்)

அரசியல் அறிவியல் (Political Science)

கணினி அறிவியல் (Computer Science)

.புள்ளியியல் (Statistics)

ஆங்கில தொடர்பியல் (Englishi for communication)

அறிவியல் மற்றும் இந்தியப் பண்பாடு (Ethics and Indian Culture)./

சிறப்புத் தமிழ்(Advanced Language Tamil)

**தொழிற் பாடங்கள் :**

1 விவசாயம்

2 பொறியியல்

3 வணிகவியல் மற்றும் வர்த்தகம்

4 மனையியல்

5 தையல்

6 நர்சிங்

அனைத்து வகைப் பாடங்களும் தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி மூலம் கற்றுத் தரப்படுகின்றன. தமிழகத்தில் அனைவருக்கும் கல்வி, இலவசக் கல்வித் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

**அரசு மற்றும் நிதி உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கட்டணங்கள்**

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12வது வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் தற்பொழுது ரூ.33/- லிருந்து ரூ.103/- வரை ஆண்டு தோறும் சிறப்புக் கட்டணமாக (Special Fees) செலுத்தி வந்துள்ளனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு

முற்றிலும் இலவச கல்வி அளிக்கும் நோக்குடன் இச்சிறப்புக் கட்டணத்தினை 2008-2009 ஆண்டிலிருந்து தமிழக அரசு இரத்து செய்துள்ளது.

**சான்று மதிப்பீடு செய்தல் :**

| | |
|---|---|
| மதிப்பீடு செய்ய வேண்டிய கல்விச் சான்றுகள் | மத்திய இடைநிலைக் கல்வி வாரிய பள்ளிச் சான்றுகள், இதர மாநில பள்ளிச் சான்றுகள் மற்றும் இதர நாட்டு கல்விச் சான்றுகள். |
| அளிக்கவேண்டிய விவரம் | மாற்றுச் சான்றிதழில் அப்பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் மேற்கையொப்பம் பெற்று இருக்க வேண்டும்.<br>ரூ.2/- மதிப்புள்ள நீதிமன்ற அஞ்சல்வில்லை ஒட்டிய விண்ணப்பம்.<br>மாணவர் விசா/பாஸ்போர்ட் (இதர நாட்டினர் மட்டும்) |
| அணுக வேண்டிய அலுவலர் | சேர்க்கை கோரும் பள்ளித் தலைமை ஆசிரியர்<br>மூலம் விண்ணப்பித்து அப்பள்ளி சார்ந்த ஆய்வு அலுவலரிடம் இச்சான்று மதிப்பீடு செய்து ஆணை பெறவேண்டும். |
| காலம் | ஜூன், ஜூலை அல்லது சேர்க்கைக்கு அரசால் நீட்டிக்கப்படும் காலம் வரை. |

இலங்கை அகதிகளின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்முன் கல்விச் சான்று அளிக்கத் தேவையில்லை. வயதின் அடிப்படையில் தகுதிக்கேற்ப பள்ளியில் சேர்க்கப்படுவர். 6ஆம் வகுப்பிற்குச் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரே அனுமதி அளித்து பள்ளியில் சேர்க்கலாம். 7 மற்றும் 8 ஆம் வகுப்பிற்கு சேர்க்க பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும்.

**புலப்பெயர்ச்சி சான்று வழங்குதல் :**

பள்ளி இறுதிச் தேர்வு/மேல்நிலை வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று இதர மாநிலங்களில் உயர்கல்வி பெறச் செல்லும் மாணவர்களுக்குப் புலப் பெயர்ச்சி சான்று அரசுத் தேர்வுகள் இயக்குநரால் வழங்கப்படுகிறது.

**காணாமல் போன சான்றிதழ்கள் மறுநகல் பெறல் :**

| | |
|---|---|
| கல்விச் சான்று | 6 முதல் 12ம் வகுப்பு வரை மாற்றுச் சான்றிதழ் மற்றும் 10 , 12ம் வகுப்பு மதிப்பெண் சான்று. |
| அளிக்கவேண்டிய விவரங்கள் | உரிய விண்ணப்பம் - குறிப்பிட்ட படிவத்தில் (படிவங்கள் ஆய்வு அலுவலர் அலுவலகம் மற்றும் தேர்வுத்துறை அலுவலகங்களில் கிடைக்கும்) |

| | |
|---|---|
| | கல்விச் சான்றிதழ்கள் தொலைந்ததற்கான சான்று கல்விச் சான்றிதழ் காணாமல் போனால் காவல் துறையினரின் சான்று பெற்று உரிய வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும்.<br>(அல்லது)<br>சான்றிதழ் நீரால், நெருப்பால் இயற்கை இடர்பாட்டால் அழிந்து போனால் தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மூலமாக வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும்.<br>பழைய சான்றிதழின் உண்மை நகல் (இருப்பின்).<br>உரிய கட்டணம் கட்டிய கருவூலகச் சலான். |
| அணுகவேண்டிய அலுவலர் | படித்த பள்ளித் தலைமை ஆசிரியர் |
| காலம் | மதிப்பெண் சான்று பெற குறைந்தபட்சம் 6 மாத காலம் ஆகும். |

**பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் மாநில மற்றும் மாவட்டஅளவில் முதல் நிலை பெறும் மூன்று மாணாக்கர்களுக்குச் சலுகை**

1996ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம். 10மற்றும் 12ம் வகுப்புகளில் மாநில அளவில் தரம் பெற்ற மாணவர்களுக்கு மட்டுமே உயர்கல்விச் செலவினம் அனுமதிக்கக் கூடிய திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

1997-98ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தை மாவட்ட அளவிலும் விரிவுபடுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் மூன்று தரம் பெற்ற மாணாக்கர்களுக்கும், மாவட்ட அளவில் முதல் தரம் பெற்ற மூன்றுவகைப் பள்ளி மாணாக்கர்களுக்கும் (1. அரசுப் பள்ளிகள், 2. அரசு உதவி பெறும் பள்ளிகள் 3.சுயநிதி,மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்) உயர்கல்விச் செலவினம் அனுமதிக்கக்கூடிய திட்டம். |
| தகுதி | 10 மற்றும் 12ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் மூன்று தரங்களை பெற்ற மாணாக்கர்களும் மாவட்ட அளவில் முதல் தரம்<br>பெற்ற மூன்றுவகை பள்ளிமாணவர்களும் (1. அரசுப் பள்ளிகள், 2. அரசு உதவி பெறும் பள்ளிகள் 3.சுயநிதி,மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்)உயர்கல்வியைத் தொடர்ந்து பயின்று வர வேண்டும். |

| | |
|---|---|
| தேவையான விவரம் | 1. விண்ணப்பம்<br>2. தொடர்ந்து படிப்பதற்கான சான்று<br>3. செலவின ரசீதுகள் |
| அனுமதிக்கும் சலுகை | 1. சேர்க்கை கட்டணம்<br>2. கற்பிப்பு கட்டணம் (இச்செலவினத்திற்கு உச்சவரம்பு இல்லை)<br>3. புத்தக செலவினம்<br>பொறியியல், மருத்துவம்,. வேளாண்மை போன்ற (Professional Courses) பட்டப் படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.3000/- உச்ச வரம்பாகவும், இதர பட்டப் படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.1500/- உச்ச வரம்பாகவும், அரசு நிர்ணயம் செய்துள்ளது.<br>4. உணவுக் கட்டணம்<br>மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- அல்லது பட்டியல்படி எது குறைவோ அத்தொகை அனுமதிக்கப்படும். |
| அணுகவேண்டிய அலுவலர் | மாணவர் படித்த பள்ளி சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவர். |

**திறமைமிக்க கிராமப்புற மாணவ, மாணவியர்க்கு ஊரகத் திறனாய்வு தேர்வுகளின் மூலம் ஊக்கப் பரிசுத் தொகை வழங்குதல்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | ஊரகத் திறனாய்வுத் தேர்வு மூலம் உதவிப் பணம் வழங்கும் திட்டம் |
| தகுதி | சென்னை நீங்கலாக, ஏனைய 29 வருவாய் மாவட்டங்களில் உள்ள கிராமப்புற பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள். |
| திட்டத்தின் செயல்பாடு | 1. ஊரக பகுதிகளில் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அவ்வகுப்பின் இறுதியில் அரசு தேர்வுத் துறையால் நடத்தப்படும் ஊரக திறனாய்வுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு 50 மாணவர்கள் 50 மாணவிகள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருடத்திற்கு ரூ.1,000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.<br>2. இம் மாணவ மாணவியர் பள்ளிப் படிப்பில் இடையில் நின்றுவிடாமல் 50 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்று தொடர்ந்து பயின்று வரவேண்டும். |
| அணுகவேண்டிய அலுவலர் : | தகுதி வாய்ந்த மாணவ / மாணவிகள் தாங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் மூலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரை அணுக வேண்டும். |

**பள்ளிகள் நிலை உயர்த்துதல் :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை |

| | |
|---|---|
| | உயர்த்துதல். |
| நிர்வாகம் | அரசு / நகராட்சி / மாநகராட்சி |
| தேவையானவை | 1. இடவசதி, கட்டிடங்கள், அடிப்படை வசதிகள்<br>2. விளையாட்டு மைதானம்<br>3. மாநகராட்சி 6 கிரவுண்டு, மாவட்டத் தலைமையிடம் 8 கிரவுண்டு, நகராட்சி 10 கிரவுண்டு, பேரூராட்சி 1 ஏக்கர், ஊரகப் பகுதி 3 ஏக்கர்<br>4. நூலக வசதி<br>5. ஆய்வக வசதி, தளவாட வசதி<br>6. 5 கிலோமீட்டர் தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி இல்லாது இருக்க வேண்டும்<br>7. ரூ.1 இலட்சம் அரசுக் கணக்கில் செலுத்தியதற்கான கருவூல செலுத்துச் சீட்டு |
| அரசுக் கணக்கில் செலுத்த வேண்டிய தொகை | ரூ. 1 இலட்சம் அருகிலுள்ள சார்நிலைக் கருவூலம்<br>அல்லது கருவூலத்தில் உரிய கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும் |
| அணுக வேண்டிய அலுவலர் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி தேதி |
| 1)உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் | டிசம்பர் 31 |
| | ஜனவரி 31 |
| 2) முதன்மைக் கல்வி அலுவலர் | பிப்ரவரி '28 |
| 3) பள்ளிக் கல்வி இயக்குநர் | |

விண்ணப்பம் மாவட்டக் கல்வி அலுவலர்/ முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரையுடன் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல் |
| நிர்வாகம் | அரசு / நகராட்சி / மாநகராட்சி |
| தேவையானவை | 1 இடவசதி, கட்டிடங்கள், அடிப்படை வசதிகள்<br>2 விளையாட்டு மைதானம்<br>3. மாநகராட்சி 6 கிரவுண்டு, மாவட்டத் தலைமையிடம் 8 கிரவுண்டு, நகராட்சி 10 கிரவுண்டு, பேரூராட்சி 1 ஏக்கர், ஊரகப் பகுதி 3 ஏக்கர்<br>4 நூலக வசதி<br>5 ஆய்வக வசதி |

| | |
|---|---|
| | 6 10ஆம் வகுப்பில் 100 மாணவர்களுக்குக் குறைவில்லாமல் இருத்தல் வேண்டும்<br>7 8 கிலோமீட்டர் தூரத்திற்குள் மேல்நிலைப் பள்ளி இல்லாது இருக்க வேண்டும்.<br>8 ரூ.2 இலட்சம் பொது மக்கள் பங்குத் தொகையாக அரசுக் கணக்கில் செலுத்தியதற்கான கருவூல செலுத்துச் சீட்டு. |
| அரசுக் கணக்கில் செலுத்த வேண்டிய தொகை | ரூ. 2 இலட்சம் அருகிலுள்ள சார்நிலைக் கருவூலம் அல்லது கருவூலத்தில் உரிய கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும் |
| விண்ணப்பதாரர் | ஊர் பொதுமக்கள் அடங்கிய பள்ளி வளர்ச்சிக் குழு அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகம் |
| <u>அணுக வேண்டிய அலுவலர்</u><br>1. மாவட்டக் கல்வி அலுவலர்<br>2. முதன்மைக் கல்வி அலுவலர்<br>3. பள்ளிக் கல்வி இயக்குநர்<br>: | <u>விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி தேதி</u><br>டிசம்பர் 31<br>ஜனவரி 31<br>பிப்ரவரி '28 |

விண்ணப்பம் மாவட்டக் கல்வி அலுவலர்/ முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரையுடன் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

தனியார் பள்ளிகளை நிலை உயர்த்துவது குறித்து மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் என்றும் நிதி உதவியின்றி செயல்பட அனுமதிக்கப்படுகின்றது. அங்கீகாரம் மட்டும் வழங்கப்படுகிறது.

**<u>இலவச பாடநூல்கள் :</u>**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலவச பாடநூல் வழங்குதல் |
| குறிக்கோள் | பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச பாடநூல் வழங்குதல். |
| வழங்கப்படும் உதவி | ஆண்டிற்கு ஒருமுறை அனைத்து பாடநூல்களும் வழங்குதல் |
| பயன்பெறுபவர் | 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்கள். |
| வழங்கப்படும் காலம் | பள்ளி துவங்கும் நாளன்றே வழங்கப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமை ஆசிரியர் |
| குறைகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர் | மாவட்டக் கல்வி அலுவலர்,<br>முதன்மைக் கல்வி அலுவலர், |

| | |
|---|---|
| | மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6 |

**இலவச மிதி வண்டி :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலவச மிதிவண்டி வழங்குதல் |
| குறிக்கோள் | மேல்நிலைக் கல்வி பயிலும் அனைத்து இன மாணவ /மாணவியர்களுக்கு இலவச மிதி வண்டி வழங்குதல். |
| பயன்பெறுபவர் | மேல்நிலைக் கல்விக் கல்வி பயிலும் அனைத்து இன மாணவ மாணவியர். |
| வழங்கப்படும் காலம்<br><br>அணுக வேண்டிய அலுவலர் | ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம்<br><br>பள்ளி தலைமை ஆசிரியர் |
| குறைகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர் | மாவட்டக் கல்வி அலுவலர்,<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6 |

**இலவச சீருடை**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலவச சீருடை வழங்குதல். |
| குறிக்கோள் | பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்குதல். |
| வழங்கப்படும் உதவி | ஆண்டிற்கு ஒரு முறை ஒரு செட் சீருடை வழங்குதல். |
| பயன்பெறுபவர் | 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவர்கள். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர். |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | ஒன்றிய அளவில்<br>1. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்,<br>கல்வி மாவட்ட அளவில்<br>2.மாவட்டக் கல்வி அலுவலர்<br>மாவட்ட அளவில்<br>1.முதன்மைக் கல்வி அலுவலர்,<br>2. மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்,<br>மாநிலஅளவில் –<br>1பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிச் சாலை, சென்னை-6, தொலைபேசி எண் 28278796,<br>2.தொடக்கக் கல்வி இயக்குநர், கல்லூரி சாலை, சென்னை-6, தொலைபேசி எண் 28271169<br>3.பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற் கல்வி) கல்லூரிச் சாலை, சென்னை-6.<br>4.தொடக்கக் கல்வி இணை இயக்குநர், கல்லூரிச் சாலை, சென்னை-6.<br>தொலைபேசி எண் 28267186. |

**இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் (Integrated Education for the Disabled Children : IEDC)**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் |
| குறிக்கோள் | இயலாக் குழந்தைகள் தங்களது குறையை உணராத வண்ணம் சாதாரண குழந்தைகளுடன் கல்வி கற்றல் |
| திட்டத்தின் செயல்பாடு | சிறப்பாசிரியர் நியமனம் குழந்தைகளுக்கு தங்கும் வசதி, பாடநூல், சீருடை, உபகரணங்கள் முதலிய செலவுகள் மைய அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 14 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 24 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளிக் கல்வி இயக்குநர் |

**தேசிய ஆசிரியர் நல நிதியம்**

<u>(1) மருத்துவ உதவி</u>

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி |
| குறிக்கோள் | பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கோ மற்றும் அவரை சார்ந்தவர்களுக்கோ மருத்துவ உதவி வழங்குதல் |
| திட்டத்தின் செயல்பாடு | தமிழ்நாடு அரசு ஊழியர் மருத்துவ நல நிதி மூலம் பயன் பெற இயலாத ஆசிரியர் மற்றும் அவரை சார்ந்தவர்களுக்கு மருத்துவ உதவியாக மொத்த செலவினத்தில் 75% அல்லது ரூ.50,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது. |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளிக் கல்வி இயக்குநர் |

<u>(2) படிப்பு உதவி :</u>

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | ஆசிரியர் குழந்தைகளுக்கான படிப்பு உதவித் தொகை |
| குறிக்கோள் | ஆசிரியர் குழந்தைகளுக்கான தொழிற்கல்வி படிப்புக்காக படிப்பு உதவித் தொகை வழங்குதல் |
| திட்டத்தின் செயல்பாடு | தொழிற் நுட்ப கல்வி பட்டபடிப்பிற்கு ரூ.5000/-ம் பட்டய படிப்பிற்கு ரூ.2,500/- ம் ஒவ்வொரு ஆண்டும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளிக் கல்வி இயக்குநர் |

**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் -2006**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் -2006 |
| குறிக்கோள் | 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை அளித்தல் |
| திட்டத்தின் செயல்பாடு | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவனுக்கு உதவித் தொகையாக ரூ.1250/-ம், மாணவிக்கு ரூ.1500/-ம் வழங்கப்படுகிறது.<br>12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவனுக்கு உதவித் தொகையாக ரூ.1750/-ம், மாணவிக்கு ரூ.2000/-ம் வழங்கப்படுகிறது. இத்தொகை அனைத்து இன மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித் தொகை பெற வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து பெற்றோர் விவசாய தொழிலாளர் என அட்டை பெற்று இருக்க வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர் |

**தாய் / தந்தை விபத்தில் மரணமடைந்த அல்லது நிரந்தர முடக்கம் அடைந்த பெற்றோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | தாய் / தந்தை விபத்தில் மரணமடைந்த அல்லது நிரந்தர முடக்கம் அடைந்த பெற்றோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை |
| குறிக்கோள் | பள்ளியில் பயிலும் மாணவர்களின் வருவாய் ஈட்டும் தாய் / தந்தை விபத்தில் மரணமடைந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அம்மாணவர்களுக்கு ரூ.50,000/-ம் உதவித் தொகை காப்பீட்டுத் தொகையாக மாணவர் மற்றும் உயிருடன் உள்ள பெற்றோர் / பாதுகாவலர் பெயரில் வங்கியில் கூட்டு கணக்காக முதலீடு செய்து மாணாக்கர்களின் நலனுக்காக வழங்கப்பட்டு வருகிறது. |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் |

**ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை உதவித் தொகை :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை |
| குறிக்கோள் | அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் தகுதியுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் |

| | |
|---|---|
| | தொகை வழங்குதல். |
| திட்டத்தின் செயல்பாடு | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் சம்மந்தப்பட்ட நலத்துறை அலுவலருக்கு விவரங்களை அனுப்பி வைத்து உதவித் தொகையைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குவார். |
| வழங்கப்படும் உதவித் தொகை | பள்ளிக்குச் செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத (Non-refundable Fees) அனைத்துக் கட்டணம், தேர்வுக்கட்டணம் மற்றும் பராமாப்புத் தொகை |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர் |

**இராணுவ பணியாளர், முன்னாள் இராணுவ பணியாளர், இலங்கை மற்றும் ஏனைய அகதிகளின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | கல்வி உதவித் தொகை |
| குறிக்கோள் | தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ்செயல்படும் பள்ளிகளில் பயிலும் இராணுவ பணியாளர், முன்னாள் இராணுவ பணியாளர், இலங்கை மற்றும் ஏனைய அகதிகளின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித் தொகை வழங்குதல். |
| திட்டத்தின் செயல்பாடு | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் மூலமாக உரிய அலுவலருக்கு விண்ணப்பித்து இந்த உதவித் தொகை சம்மந்தப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. |

**துப்புரவு பணியாளர் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை :**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | துப்புரவு பணியாளர் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை |
| குறிக்கோள் | தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ்செயல்படும் பள்ளிகளில் பயிலும் துப்புரவு பணியாளர் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித் தொகை வழங்குதல். |
| அணுக வேண்டிய அலுவலர் | பள்ளித் தலைமையாசிரியர் |
| திட்டத்தின் செயல்பாடு | சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் மூலமாக மாவட்ட ஆட்சியருக்கு கருத்துருக்கள் அனுப்பப் பட்டு ஒவ்வொரு ஆண்டும் கீழ்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | வகுப்பு | உதவித் தொகை (ரூபாயில்) |
| | 1-5 | 950 |
| | 6-8 | 1150 |
| | 9-10 | 1300 |

# மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின் முக்கிய நோக்கம் அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரிகுலேஷன்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள் மூலமாக தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்வதாகும்.

**மாணவர் சேர்க்கை**

மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் கீழ்க்கண்ட நடைமுறையின் படி மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

1. நேரடிச் சேர்க்கை
2. மாற்றுச் சான்றிதழ் மூலம் சேர்க்கை
3. தனிப்படிப்புச் சேர்க்கை

நேரடி மற்றும் மாற்றுச் சான்றிதழ் மூலம் சேர்க்கை:

| | |
|---|---|
| வகுப்பு | LKG-12; LKG-10; 6-10; 6-12 |
| சேர்க்கை செய்ய வேண்டிய காலம் | பள்ளி திறந்த தேதி முதல் ஜூலை 31 வரை (அல்லது) அவ்வப்போது அரசால் நீட்டிக்கப்படும் தேதி வரை |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர் |
| வயது வரம்பு தளர்வு அளித்தல் | ஜூலை 31-ஆம் தேதிய நிலவரப்படி முதல் வகுப்பில் சேர்க்கை 5 வயது முடிவு பெற்றிருக்க வேண்டும். இதே போன்று அடுத்த வகுப்புகளுக்கும் வயது கணக்கிடப்படுகிறது. உதாரணமாக 6-ஆம் வகுப்பு சேர்க்க ஜூலை 31-ஆம் தேதியன்று 10 வயது (5+5=10) முடிவு பெற்றிருக்க வேண்டும். இதில் 6 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்களிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். 6 மாதங்களுக்கு மேல் வயது குறைவு ஏற்பட்டால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும்(முதல் வகுப்பு தவிர) |
| தகுதி மற்றும் தேவையான விவரம் | அங்கீகரிக்கப்பட்ட தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் துவக்கக் கல்விப் படிப்பை முடித்த குழந்தைகள் அவர்கள் படித்த பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட பதிவுத் தாள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் அடிப்படையில் 6-ஆம் வகுப்பு மற்றும் 9-ஆம் வகுப்புகளில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கலாம். 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்று அடிப்படையில் மேல்நிலைப் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் சேர்க்கலாம். |

கல்வியாண்டின் இடையில் மேற்கண்ட காலத்திற்குப் பின்னரும், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் அலுவலகங்களில் பணிபுரிவோர் மாறுதல் ஏற்பட்டு குடிபெயர்ந்து செல்லும்போது அவர்களது குழந்தைகள் படித்த பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றினைப் பெற்று குடிசெல்லும் இடத்திற்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கை மேற்கொள்ளலாம். இதனை அப்பள்ளி முதல்வரே மேற்கொள்ளலாம். ஆய்வு அலுவலரின் அனுமதி பெற வேண்டியதில்லை.

மாநிலக் கல்வித் திட்டம் பின்பற்றப்படும் பள்ளிகளிலிருந்து மெட்ரிகுலேஷன் பள்ளிக்கோ, மெட்ரிகுலேஷன் பள்ளியிலிருந்து இதர வகை பள்ளிக்கோ, அல்லது இந்தியாவிலுள்ள இதர மாநிலத்திலுள்ள பள்ளிக்கோ செல்லும்போது, பயின்ற பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் மாற்றுச் சான்றில் மேலொப்பம் பெறப்பட்டு இருக்க வேண்டும். இதனை பள்ளி முதல்வர்கள் மாணவர்கள் சேர்க்கையின் சமயம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**தனிப்படிப்பு சேர்க்கை:**

| | |
|---|---|
| வகுப்பு | 7ஆம் வகுப்பு வரை தனிப்படிப்பு முடிக்கலாம். பிறகு 8-ஆம் வகுப்பில் சேரலாம். |
| சேர்க்கை செய்ய வேண்டிய காலம் | பள்ளி திறந்த தேதி முதல் ஜூலை 31 வரை (அல்லது) அவ்வப்போது அரசால் நீட்டிக்கப்படும் தேதி வரை |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர்கள் |
| தகுதி மற்றும் தேவையான விவரம் | 7ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்படாத பள்ளிகளிலோ தனியாக வீட்டில் இருந்தபடியோ படித்த, பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளிகளில் தனிப்படிப்பு மூலம் சேர்க்கலாம். இவ்வகைச் சேர்க்கைக்கு கீழ்க்கண்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்.<br>1. அங்கீகரிக்கப்படாத பள்ளியில் பயின்றதற்கான சான்று அல்லது தனிப்படிப்பு சான்று<br>2. பிறந்த தேதிச் சான்றிதழ்<br>3. ஜாதிச் சான்றிதழ் |
| வயது வரம்பு தளர்வு | ஜூலை 31-ஆம் தேதிய நிலவரப்படி முதல் வகுப்பில் சேர்க்கை 5 வயது முடிவு பெற்றிருக்க வேண்டும். இதே போன்று அடுத்த வகுப்புகளுக்கு வயது கணக்கிடப்படுகிறது. உதாரணமாக 6-ஆம் வகுப்பு சேர்க்க ஜூலை 31-ஆம் தேதியன்று 10 வயது (5+5=10) முடிவு பெற்றிருக்க வேண்டும். இதில் 6 மாதங்கள் வரை வயது குறைவு ஏற்பட்டால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்களிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும். 6 மாதத்திற்கு மேல் வயது |

| | |
|---|---|
| | குறைவு ஏற்பட்டால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரிடம் வரம்பைத் தளர்த்தி ஆணை பெற வேண்டும் |

மேற்கண்ட நிலைகளில் தனிப்படிப்புச் சேர்க்கைக்கு சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர், சேர்க்கை கோரும் வகுப்புக்கேற்ப தேர்வு வைத்து, அவ்வகுப்பில் சேர்க்க தகுதியுடையவரா என்பதைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் சேர்க்கை மேற்கொள்வார்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 11-ம் வகுப்பு சேர்க்கை (அரசு ஆணை எண்.191 பள்ளிக் கல்வித் துறை நாள் 11.06.2007ன் படி)<br><br>மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு படித்து முடித்து அதே பள்ளியில் 11-ஆம் வகுப்பு சேர்க்கை கோரும் மாணவர்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் அவர்கள் கோரும் பாடப்பிரிவில் சேர்க்கை அனுமதிக்கப்பட வேண்டும். எஞ்சிய இடங்கள் மட்டுமே பிற பள்ளியிலிருந்து சேர்க்கை கோரும் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர்கள். |
| குறை தீர்க்கும் அலுவலர் | மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வர். |
| மேல் முறையீட்டு அலுவலர் | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6. |

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் முறையற்ற கட்டணம் வசூல் செய்வது சார்பாக புகார் அளித்தல் (அரசு ஆணை எண்.224 பள்ளிக் கல்வித் துறை நாள் 05.09.2007ன்படி) |
| அணுகவேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வர்/மாவட்டட முதன்மைக் கல்வி அலுவலர். |

**பாடத்திட்டம்**

LKG முதல் 10 வகுப்புகளில் மெட்ரிகுலேஷன் பாடத்திட்டமும் 11, 12 வகுப்புகளில் மாநில பாடத்திட்டமும் கடைபிடிக்கப்படுகிறது.

**மெட்ரிகுலேஷன் பாடத்திட்டம்**

| | | |
|---|---|---|
| பகுதி - 1 | - | தமிழ் |
| பகுதி - 2 | - | ஆங்கிலம் |
| பொதுப்பாடம் | - | கணக்கு (ஆங்கில வழி) |
| | | அறிவியல் (ஆங்கில வழி) |
| | | சமூக அறிவியல் (ஆங்கில வழி) |

| | |
|---|---|
| பகுதி 1 | தமிழ் (2008-2009 ஆண்டில் 1 முதல் 3 வகுப்புகளுக்கு கட்டாய பாடம்) |

| | |
|---|---|
| பகுதி II | ஆங்கிலம் (கட்டாயப் பாடம்) |
| பகுதி III | இதர பாடங்கள் (கணிதம் அறிவியல் சமூக அறிவியல் போன்றவை) |
| பகுதி IV | தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்டிராத மாணாக்கர் தமது தாய் மொழியை விருப்பப் பாடமாகப் பயிலலாம் |

**சான்று மதிப்பீடு செய்தல்**

| | |
|---|---|
| மதிப்பீடு செய்ய வேண்டிய கல்விச் சான்றுகள் | மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் பயின்றோர் மற்றும் இதர மாநிலங்களிலுள்ள பள்ளிகளில் பயின்றோர் - இவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் சேர்க்கை கோரும் பட்சத்தில் அச்சான்று மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |
| அளிக்க வேண்டிய விவரம் | 1. மாற்றுச் சான்றிதழில் அப்பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும்.<br>ரூ.2/- மதிப்புள்ள நீதிமன்ற அஞ்சல் வில்லை ஒட்டிய விண்ணப்பம் |
| அணுகவேண்டிய அலுவலர் | சேர்க்கை கோரும் பள்ளி முதல்வர் மூலம் விண்ணப்பித்து அப்பள்ளியின் அலுவலரிடம் இச்சான்று மதிப்பீடு செய்து ஆணை பெற வேண்டும். |
| காலம் | ஜூன், ஜூலை அல்லது சேர்க்கைக்கு அரசால் நீட்டிக்கப்படும் காலம் வரை |
| மதிப்பீடு செய்ய வேண்டிய கல்விச் சான்றுகள் | இதர நாட்டுக் கல்விச் சான்றுகள் |
| அளிக்க வேண்டிய விவரம் | 1. மாணவர் விசா/பாஸ்போர்ட்<br>2. மதிப்பெண் பட்டியல்<br>3. மாற்றுச்சான்று- சம்பந்தப்பட்ட கல்வி அலுவலர், சம்பந்தப்பட்ட தூதரக அலுவலர் ஆகியோர் மேலொப்பமிட்டிருக்கவேண்டும்.<br>4. ரூ.2/- மதிப்புள்ள நீதிமன்ற அஞ்சல் வில்லை ஒட்டிய விண்ணப்பம் |
| அணுகவேண்டிய அலுவலர் | சேர்க்கை கோரும் பள்ளி முதல்வர் மூலம் விண்ணப்பித்து அப்பள்ளியின் ஆய்வு அலுவலரிடம் இச்சான்று மதிப்பீடு செய்து ஆணை பெற வேண்டும் |
| கால அளவு | ஜூன், ஜூலை அல்லது சேர்க்கைக்கு அரசால் நீட்டிக்கப்படும் காலம் வரை |

இலங்கையில் இருந்து வரும் அகதிகளின் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் முன் கல்விச் சான்று ஏதும் தேவையில்லை. அகதி முகாம் அலுவலர் சான்று மற்றும் காவல் துறையினரிடமிருந்து பெற்ற ஆளறிச் சான்றினையும் பெற்று வயதின்

அடிப்படையில் தகுதிக்கேற்ப பள்ளியில் அனுமதி அளித்து பள்ளியில் சேர்க்க வேண்டும். 6-ஆம் வகுப்பிற்கு சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வரே அனுமதி அளித்து பள்ளியில் சேர்க்கலாம். 7 மற்றும் 8ஆம் வகுப்பிற்குச் சேர்க்க, பள்ளி சார்ந்துள்ள ஆய்வு அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும்.

**காணாமல் போன சான்றிதழ்கள் மறு நகல் பெறல்**

| | |
|---|---|
| **கல்விச் சான்று** | **6 முதல் 12ஆம் வகுப்பு வரை மாற்றுச் சான்றிதழ்.** |
| அளிக்க வேண்டிய விவரங்கள் | உரிய விண்ணப்பம் குறிப்பிட்ட படிவத்தில் (படிவங்கள் ஆய்வு அலுவலர் அலுவலகம் மற்றும் தேர்வுத்துறை அலுவலகங்களில் கிடைக்கும்) கல்விச் சான்றிதழ்கள் தொலைந்ததற்கான சான்று- கல்விச் சான்றிதழ் காணாமல் போனால் காவல் துறையினரின் சான்று பெற்று அதன் அடிப்படையில் உரிய வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் (அல்லது) சான்றிதழ், நீரால், நெருப்பால், இயற்கை இடர்பாட்டால் அழிந்து போனால் தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மூலமாக வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும்.<br>பழைய சான்றிதழின் உண்மை நகல் (இருப்பின்) உரிய கட்டணம் செலுத்தப்பட வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | படித்த பள்ளியின் முதல்வர் |
| நடைமுறை | சரியான தகவல்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வரால் உடன் மறுநகல் வழங்கப்படும் |
| **கல்விச்சான்று** | **மெட்ரிகுலேஷன் 10, 12-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்று** |
| அளிக்க வேண்டிய விவரங்கள் | உரிய விண்ணப்பம் குறிப்பிட்ட படிவத்தில் (படிவங்கள் ஆய்வு அலுவலர் அலுவலகம் மற்றும் தேர்வுத்துறை அலுவலகங்களில் கிடைக்கும்) கல்விச் சான்றிதழ்கள் தொலைந்ததற்கான சான்று - கல்விச் சான்றிதழ் காணாமல் போனால் காவல் துறையினரின் சான்று பெற்று அதன் அடிப்படையில் உரிய வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும் (அல்லது) சான்றிதழ், நீரால், நெருப்பால், இயற்கை இடர்பாட்டால் அழிந்து போனால் தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மூலமாக வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும். பழைய சான்றிதழின் உண்மை நகல் (இருப்பின் ) உரிய கட்டணம் கட்டிய கருவூலச் சலான் |
| அணுக வேண்டிய அலுவலர் | படித்த பள்ளியின் முதல்வர் மூலம் உரிய ஆய்வு அலுவலர் வழியாக அரசுத் தேர்வுகள் இயக்குநர் |
| நடைமுறை | ஆய்வு அலுவலரிடம் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றவுடன் அனைத்தும் சரியாக இருப்பின் காணாமல் போன விவரத்தை அரசிதழில் |

| | |
|---|---|
| | வெளியிட எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநருக்கு அனுப்பி நடவடிக்கை எடுப்பார். அரசிதழ் வெளியீடு கிடைக்கப் பெற்றதும் உரிய விண்ணப்பத்தை அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுப்பி வைப்பார். அனைத்தும் சரியாக இருப்பின் அரசுத் தேர்வுகள் இயக்குநர் மறு பிரதி மதிப்பெண் சான்று வழங்குவார். மறு பிரதி மதிப்பெண் சான்றிதழ் கையால் எழுதப்பட்டிருக்கும் |
| செல்லத் தக்க கால அளவு | குறைந்தபட்சம் 6 மாத காலம் ஆகும் |

## மெட்ரிகுலேஷன் பள்ளி ஆரம்பித்தல் / நிலை உயர்த்துதல்

தேவையானவை

1. கல்வி அறக்கட்டளை ஒன்று நிறுவி, பதிவு செய்யப்பட வேண்டும். குறைந்தபட்சம் 5 நபர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
2. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் துவக்க/நிலை உயர்த்த ஒரே ஒரு முறை கீழ்க்கண்டவாறு பங்குத் தொகை/கட்டணத் தொகை கட்டப்பட வேண்டும்.

**1. பங்குத் தொகை**

| மெட்ரிகுலேஷன்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை | கட்டப்பட வேண்டிய பங்குத் தொகை |
|---|---|
| 2000 அதற்கு மேலும் | ரூ.1,00,000/- |
| 1500-2000 | ரூ.80,000/- |
| 1000-1500 | ரூ.60,000/- |
| 750-1000 | ரூ.40,000/- |
| 500-750 | ரூ.20,000/- |
| 500-ம் அதற்குக் கீழும் | ரூ.10,000/- |

**2. கட்டணத் தொகை**

| | |
|---|---|
| (அ) மெட்ரிகுலேஷன் பள்ளி துவக்க கட்டணம் | ரூ.10,000/- |
| (ஆ) 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர் அங்கீகாரத்திற்கான விண்ணப்ப கட்டணம் | ரூ.1,000/- |
| (இ) (i) மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளிகளை ஆய்வு செய்வதற்கான கட்டணம் (ஒவ்வொரு ஆண்டும்) | ரூ.2,500/- |
| (ii) மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளை ஆய்வு செய்வதற்கான கட்டணம் (ஒவ்வொரு ஆண்டும்) | ரூ.5,000/- |
| (ஈ) மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த கட்டணம் | ரூ.10,000/- |
| உ. அறக்கட்டளைத் தொகை (பள்ளியின் பெயரில் ஏழு ஆண்டுகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத் தொகையாக முதலீடு செய்தல் வேண்டும். | ரூ.2,00,000/- |
| ஊ. மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் (வங்கியில் பள்ளியின் பெயரில் முதலீடு செய்தல் வேண்டும்.) | ரூ.25,000/- |

பள்ளியில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களின் ஒரு மாதத்திற்கான மாத ஊதியத்தினை வங்கியில் பள்ளியின் பெயரில் முதலீடு செய்தல் வேண்டும்.

கிராமப்புறங்களில் புதியதாக பள்ளி துவங்க வேண்டுமெனில், ஏற்கனவே அப்பகுதியில் இயங்கி வரும் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும் புதியதாக துவங்கவுள்ள பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தபட்சம் 1 கி.மீ. இருக்க வேண்டும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் துவக்கக் கோரும் விண்ணப்பம் "Code of Regulations for Matriculation Schools in Tamil Nadu" என்ற நூலில் காணலாம். புதியதாக பள்ளிகள் துவக்க அனுமதி மற்றும் தொடர் அங்கீகாரம் கோரி விண்ணப்பங்கள் டிசம்பர் 31க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சார்ந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் மூலமாக ஆணை பெறவேண்டி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

பள்ளி துவக்க அனுமதி ஆணை பெற்று 3 மாதத்திற்குள், பள்ளி சார்பான அங்கீகாரம் கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

முதற்கட்டமாக ஒன்று முதல் ஆறு வகுப்புகள் வரை துவக்க அனுமதியும், அதற்கடுத்து அடுத்தடுத்த உயர் வகுப்புகள் துவங்குவதற்கு தகுதி அடிப்படையில் அனுமதி ஆணையும் வழங்கப்படும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்குமுன் அத்தகைய பள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள குறைந்த அளவு அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

<u>நிலம்</u>

| | | |
|---|---|---|
| மாநகராட்சி | - | 6 கிரவுண்ட் |
| மாவட்ட தலைமையகம் | - | 8 கிரவுண்ட |
| நகராட்சி | - | 10 கிரவுண்ட் |
| நகரியம் | - | 1 ஏக்கர் |
| கிராமப்புறம் | - | 3 ஏக்கர் |
| இடம் | - | பள்ளியின் பயன்பாட்டிற்கென பள்ளியின் பெயரில் 30 ஆண்டுகளுக்குக் குத்தகையாகவோ அல்லது சொந்தமாகவோ இடம் பள்ளியின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். |

**கட்டடம்**

ஒப்பளிக்கப்பட்ட வரைபட நகலின் படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். இக்கட்டிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து சான்று பெற வேண்டும். மாணவர்கள்/ஆசிரியர்கள் எண்ணிக்கைக்கேற்ப உரிமச் சான்று பெற வேண்டும்.

**வகுப்பறை**

ஒரு மாணவனுக்கு 9 அல்லது 10 சதுர அடி பரப்பளவு உள்ள வகுப்பறைகள் அமைதல் வேண்டும்.

**நூலகம்**

நாளிதழ்கள், பருவ இதழ்கள் கொண்டதோடு,பாடவாரியான மேற்கோள் நூல்கள், சுய மேம்பாட்டு புத்தகங்கள், வரைபடங்கள், பூகோள வரைபடங்கள், மாதிரிகள், கற்றல் கற்பித்தல்சாதனங்கள், ஒலி, ஒளி சாதனங்கள் கொண்டதாக இருக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளி நூலகமாயிருந்தால் குறைந்தபட்சம் 1500 புத்தகங்களும், மேல்நிலைப் பள்ளியாக இருந்தால் குறைந்தபட்சம் 3000 புத்தகங்களும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

**செய்முறைக் கூடம்**

உயர்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை பயில்வதற்கேற்ற வகையில் முழுமையான பொது அறிவியல் செய்முறைக் கூடம் அமைதல் வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் இயற்பியல், வேதியியல், உயிரியல் என தனித்தனி செய்முறைக் கூடங்கள் அமைதல் வேண்டும். கணினி, ஆய்வகம் முழுமையான வசதியுடன் அமைக்கப்பட வேண்டும்.

**விளையாட்டிடம்**

போதுமான அளவுக்கு விளையாட்டிடம் பள்ளியின் வளாகத்திலேயே அமைதல் வேண்டும்.

**பொது**

குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் போதுமான அளவில் செய்து தருதல் வேண்டும்.

முழுக் கல்வித் தகுதிகள் பெற்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே ஒப்பந்தம் பெறப்படல் வேண்டும்.

கைபேசி பள்ளி வளாகத்தில் மாணவர்கள் பயன்படுத்தக் கூடாது. (அரசு ஆணை எண்.28 பள்ளிக் கல்வித்துறை நாள் 13.11.2007.)

சுகாதாரம் மற்றும் உடல் நலத்திற்கு கேடான உணவுப் பொருட்கள் பள்ளி வளாகத்தில் விற்பனை செய்யக்கூடாது.

# ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக தரமான ஆசிரியக் கல்வியை வழங்குவதே ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் நோக்கமாகும்.

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் நிறுவுதல் (DIET) |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தரமான ஆசிரியர் கல்வியை ஆசிரியர் முன்பயிற்சி கல்வி மூலமாக உறுதி செய்தல் |
| திட்டம் தற்பொழுது செயல்படும் மாவட்டங்கள் | 30 வருவாய் மாவட்டங்கள் |
| திட்டத்திற்கான கால அளவு | இரண்டு ஆண்டுகள் பயிற்சி |
| பயன்பெறுவோர் | 2500 மாணவர்கள் |
| சேர்க்கை முறை | 1. 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 45% எடுத்திருக்க வேண்டும்.<br>2. பெறப்பட்ட சேர்க்கைக்கான மொத்த விண்ணப்பங்களில் கூடுதல் மதிப்பெண், இனச்சுற்று, பாடமுறை ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>3. ஒவ்வொரு ஆண்டும் 50% ஆண்கள், 50% பெண்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>4. ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தவர்க்கென 18% / 1% மொத்த ஒதுக்கீட்டில் சேர்க்கப்படுகின்றனர்.<br>5. அந்தந்த ஆண்டில் ஜூலை திங்கள் 31ஆம் நாளன்று அதிகபட்ச வயது 30க்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிகபட்ச வயது 35. |
| அணுக வேண்டிய அலுவலர் | முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்.<br>இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6.<br>தொலைபேசி : 044-28278742 |

**ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்**

| | | | |
|---|---|---|---|
| திட்டத்தின் பெயர் | ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | | |
| | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | | 9 |
| | அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | | 7 |
| | அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | | 35 |
| | ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | | 1 |
| | நிதியுதவி பெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | | 2 |
| | நிதியுதவி பெறாத சிறுபான்மையல்லாத ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | | 580 |
| | | | 634 |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தரமான ஆசிரியக் கல்வியை ஆசிரியர் முன்பயிற்சி கல்வி மூலமாக உறுதி செய்தல் | | |
| திட்டம் தற்பொழுது செயல்படும் மாவட்டங்கள் | 30 வருவாய் மாவட்டங்கள் | | |
| திட்டத்திற்கான கால அளவு | இரண்டு ஆண்டுகள் | | |
| பயன்பெறுவோர் | | | மாணவர் எண்ணிக்கை |
| | அ) | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 480 |
| | ஆ) | அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையல்லாதோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 560 |
| | இ) | அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 2960 |
| | ஈ) | ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 40 |
| | உ) | நிதியுதவி பெறாத சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 200 |
| | ஊ) | நிதியுதவி பெறாத சிறுபான்மையல்லாத ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் | 37290 |
| | | | 42530 |
| சேர்க்கை முறை | 1. 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 45% எடுத்திருக்க வேண்டும்.<br>2. பெறப்பட்ட சேர்க்கைக்கான மொத்த விண்ணப்பங்களில் கூடுதல் மதிப்பெண், இனச்சுற்று, பாடமுறை ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>3. ஒவ்வொரு ஆண்டும் 50% ஆண்கள், 50% பெண்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>4. ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தவர்க்கென 18% / 1% மொத்த ஒதுக்கீட்டில் சேர்க்கப்படுகின்றனர்.<br>5. அந்தந்த ஆண்டில் ஜூலை திங்கள் 31ஆம் நாளன்று அதிகபட்ச வயது 30க்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிகபட்ச வயது 35. | | |

| | |
|---|---|
| அணுக வேண்டிய அலுவலர் | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் / தலைமை ஆசிரியர், |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | 1. அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் / தலைமை ஆசிரியர்.<br>2. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்.<br>3. இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6.<br>தொலைபேசி : 044-28278742 |

**உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தரமான உடற்கல்வி ஆசிரியர்களை உருவாக்குதல் |
| திட்டம் தற்பொழுது செயல்படும் மாவட்டங்கள் | அனைத்து மாவட்டங்கள் (3 தனியார் நிறுவனங்கள் – சென்னை, கோவை, தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன) |
| திட்டத்திற்கான கால அளவு | இரண்டு ஆண்டுகள் பயிற்சி |
| சேர்க்கை முறை | 1. 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மொத்த மதிப்பெண்கள் 45% எடுத்திருக்க வேண்டும்.<br>2. ஒவ்வொரு ஆண்டும் 50% ஆண்கள் 50% பெண்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.<br>3. தமிழக அரசின் இனவாரி ஒதுக்கீடு ஆணையின் அடிப்படையில் மாணவர் சேர்க்கப்படுகின்றனர்.<br>**4.** விளையாட்டில் பங்கேற்பு சான்றிதழ்கள் மற்றும் உடற்பயிற்சித் தேர்வுகளின் அடிப்படையில், தகுதி அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். |
| பயன்பெறுவோர் | 240 மாணவர்கள் |
| அணுக வேண்டிய அலுவலர் | இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6. |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6.<br>தொலைபேசி : 044-28278742 |

**அயல் மாநிலங்களின் ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றிதழ்கள் மதிப்பீடு செய்தல்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | அயல் மாநிலங்களின் ஆசிரியர் பட்டயப் பயிற்சி சான்றிதழ்கள் மதிப்பீடு செய்தல் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தரமான ஆசிரியக் கல்வியை ஆசிரியர் முன்பயிற்சி கல்வி மூலமாக உறுதி செய்தல் |
| திட்டம் தற்பொழுது செயல்படும் மாவட்டங்கள் | அனைத்து மாவட்டங்கள் |
| பயன்பெறுவோர் | 12ஆம் வகுப்பில் 50 சதவிகித மதிப்பெண் பெற்று வெளிமாநில ஆசிரியர் பட்டயப் பயிற்சியில் 50 சதவிகித மதிப்பெண் பெற்ற தகுதியான மாணவர்கள் |
| அணுக வேண்டிய அலுவலர் | துணை இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை-6. |
| குறைபாடுகள் இருப்பின் | இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி |

| | |
|---|---|
| தெரிவிக்க வேண்டிய அலுவலர் | இயக்ககம், சென்னை-6.<br>தொலைபேசி : 044-28278742 |

# பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

**இயக்ககத்தின் தொலைநோக்குத் திட்டம்**

நாம் கீழ்க்கண்டவைகளை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

- முழு எழுத்தறிவுத்திட்ட இலக்கை அடைதல்
- எழுத்தறிவற்ற வயது வந்தோர், பள்ளிப்படிப்பை இடையில் விட்டோர், பள்ளிக்கே செல்லாதோர், ஆகியோருக்கான வாழ்நாள் முழுவதும் பொருத்தமான, பயனுடைய எழுத்தறிவை பல்வகை முயற்சிகள் மற்றும் வழிமுறைகள் மூலம் அளித்தல்.

**செயல்நோக்கு**

அ) 15 முதல் 35 வயதுடைய அனைத்து எழுத்தறிவு அற்றவர்களுக்கும் எழுத்தறிவினை அளித்தல்.

ஆ) தமிழகத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் வளர் கல்வி மையங்களைத் தொடங்கி கற்கும் சூழ்நிலை, விளையாட்டு, பொழுது போக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்புகளை உருவாக்குதல்.

இ) எழுத்தறிவு சதவிகிதத்தில் நிலவும் ஆண் / பெண் வேற்றுமையை குறைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டிலுள்ள மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய அனைத்து மாவட்டம்/ வட்டாரங்களிலும் மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயல்படுத்துதல்.

**இலக்கை அடைவதற்கு பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள்**

I) முழு எழுத்தறிவு இயக்கம்/ தொடர்கல்வித் திட்டம் ஆகியவைகளை தொடர்ந்து வளர்கல்வித் திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் மேற்படி திட்டங்களில் பயன் பெற்றோர் தாம் பெற்ற எழுத்தறிவுத் திறனை நிலைநிறுத்திக் கொள்ளவும் மற்றும் எழுத்தறிவுத் திறனை மேம்படுத்தவும் வளர்கல்வி மைய நூலகங்கள் பயன்படுகின்றன. மேலும் வளர்கல்வித் திட்டத்தின் மூலம் பல்வகை தொழிற் பயிற்சி திறன்கள் மேம்படுகின்றன.

1) முழு எழுத்தறிவு மற்றும் தொடர் கல்வித் திட்டடத்தால் எழுத்தறிவு பெற்றவர்கள் தாம் கற்றதனை நிலைநிறுத்த வளர்கல்வி மையங்கள் அமைத்து அவர்களுக்கு எழுத்தறிவு தொடர்ந்து அளித்தல்.

2) அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் கல்வி நிறுவனத்துடன் இணைந்து தொழிற்கல்வி சார்ந்து பல பயிற்சிகளை வழங்கி ஈடுபடுத்துதல்.

3) மாநிலத்திலுள்ள அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து விழிப்புணர்வுத் திட்டங்களின் மூலம் குடிமை உரிமைகள் மற்றும் மக்களாட்சியின் கடமைகளை உணர்த்துதல்.

II) தமிழ்நாட்டிலுள்ள மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியுள்ள அனைத்து மாவட்டம் / வட்டாரங்களிலும் மகளிருக்கான சிறப்பு

எழுத்தறிவு மையங்கள் துவக்கி எழுத்தறிவை மேம்படுத்துதல். இதன் மூலம் எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையை போக்குதல்.

**1. செயல்பட்டுவரும் நலத் திட்டங்கள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | வளர்கல்வித் திட்டம் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவு அளித்து கல்லாமையை இல்லாமை ஆக்குவதாகும் |
| திட்டம் தற்பொழுது செயல்படும் மாவட்டம் | தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது ( 30 மாவட்டங்கள் ) |
| திட்டத்திற்கான கால அளவு | 5 ஆண்டுகள் |
| பயன் பெறுவோர் | எழுத்தறிவற்ற 15 முதல் 35 வயது பிரிவினர் பள்ளிக்கு செல்லாதோர் மற்றும் பள்ளியை இடையில் நிறுத்தியவர்கள் மற்றும் அறிவொளி/தொடர்கல்வி திட்டங்களில் புதிதாக கற்றவர்கள் |
| கற்பிக்கும் முறை | 1. ஒரு தொடர்பாளர் 20 எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவு அளித்தல் ( ஆறு மாதத்திற்குள் ) |
| | 2.தொடர்பாளர்கள் குறைந்தது 10ம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும் |
| அணுகவேண்டிய அலுவலர் | மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | 1. மாவட்ட ஆட்சியர்<br>2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம். சென்னை-6<br>3.இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6<br>தொலைபேசி எண் - 28272048<br>- 28277039 |

**2. மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், எழுத்தறிவில் பின்தங்கியுள்ள மகளிருக்கு கல்வி எழுத்தறிவித்தல் |
| திட்டம் தற்போது செயல்படும் மாவட்டங்கள் | 2007-08 ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுகிறது |
| திட்டத்திற்கான கால அளவு | 6 மாதங்கள் |
| பயன்பெறுவோர் | 15-35 வயது மகளிர் மட்டும் |
| கற்பிக்கும் முறை | வளர்கல்வி மையங்கள் மூலம் |
| கற்பிப்பாளர் கல்வித்தகுதி | கற்பிப்பாளர் குறைந்தது 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேற்பார்வையாளர் குறைந்தது 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| அணுகவேண்டிய அலுவலர் | மாவட்ட ஆட்சித் தலைவர்/ மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர் |

| | |
|---|---|
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | 1. மாவட்ட ஆட்சியர்<br>2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம். சென்னை-6<br>3.இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6<br>தொலைபேசி எண் - 28272048<br>- 28277039 |

## 3. விடுபட்ட மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | விடுபட்ட மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களிலும் மாநில சாராசரி எழுத்தறிவு விகிதத்தை விட குறைவாகவும், மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கியுள்ள 17 மாவட்டங்களை கண்டறியப்பட்டு விடுபட்ட மகளிருக்கு கல்வி எழுத்தறிவித்தல் |
| திட்டம் தற்போது செயல்படும் மாவட்டங்கள் | தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், நாமக்கல், ஈரோடு. சேலம், திருவண்ணாமலை., கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, விருதுநகர், வேலூர், கிருஷ்ணகிரி, கடலூர் மற்றும் திண்டுக்கல் |
| திட்டத்திற்கான கால அளவு | ஒரு வருடம் |
| பயன்பெறுவோர் | விடுபட்ட எழுத்தறிவற்ற மகளிர் |
| கற்பிக்கும் முறை | வளர்கல்வி மையங்கள் மூலம் |
| அணுகவேண்டிய அலுவலர் | மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலர் / மாவட்ட கல்வி அலுவலர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | 1. மாவட்ட ஆட்சியர்<br>2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம். சென்னை-6.<br>3.இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6<br>தொலைபேசி எண் - 28272048<br>- 28277039 |

## 4. தேசிய திறந்தவெளி பள்ளித் திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | தேசிய திறந்தவெளி பள்ளித் திட்டம் |
| திட்டத்தின் குறிக்கோள்கள் | புதிதாக எழுதப் படிக்க கற்றுக்கொண்டவர்கள் தாம் கற்றுக்கொண்ட கல்வியை தொடர்வதில் ஆர்வம் கொண்டவர்களுக்கு வசதியாக புதுடெல்லி தேசிய திறந்தவெளி கல்வியுடன் இணைந்து பள்ளிக் கல்விக்கு இணையான வகுப்புகள் நடத்துவது.<br>நிலை – 1 – ( 3ம் வகுப்பு )<br>நிலை- 2 – ( 5ம் வகுப்பு)<br>நிலை-3 – ( 8ம் வகுப்பு ) |
| திட்டம் தற்போது செயல்படும் மாவட்டங்கள் | அனைத்து மாவட்டங்கள் |

| | |
|---|---|
| திட்டத்திற்கான கால அளவு | தொடர்ந்து நடத்தும் திட்டம் |
| பயன்பெறுவோர் | புதிதாக எழுதப்படிக்க கற்றுக் கொண்டவர்கள்<br>பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்கள் ( 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் ) |
| கற்பிப்பாளர் கல்வித்தகுதி | ( வளர்கல்வி மையப் பொறுப்பாளர் ) கற்பிப்பாளர் குறைந்தது 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேற்பார்வையாளர் குறைந்தது 12ம் வகுப்பு தேர்ச்சி. |
| கற்பிக்கும் முறை | வளர்கல்வி மையங்கள் மூலம் பள்ளிக் கல்விக்கு இணையாக |
| அனுகவேண்டிய அலுவலர் | மாவட்ட ஆட்சித் தலைவர்/ மாவட்ட வயதுவந்தோர் கல்வி அலுவலர்/மாவட்ட கல்வி அலுவலர் |
| குறைபாடுகள் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | 1. மாவட்ட ஆட்சியர்<br>2. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம். சென்னை-6<br>3.இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6<br>தொலைபேசி எண் - 28272048<br>- 28277039 |

# அரசுத் தேர்வுகள் இயக்ககம்

பள்ளிப் பாடங்களில் மாணவர்கள் பெற்ற அறிவுத் திறனையும் தொழிற்கல்வி பாடங்களில் மாணவர்கள் பெற்ற தொழிற்கல்வி ரீதியான அடைவுகளையும் மதிப்பீடு செய்வதற்கான பள்ளிக் கல்வி சார்ந்த பொதுத் தேர்வுகளையும் தொழிற்கல்வி சார்ந்த பொதுத் தேர்வுகளையும் மற்றும் திறனறிதல் தேர்வுகளையும் நடத்தி குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவதே இத்துறையின் நோக்கமாகும்.

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் ஏப்ரல் பருவங்களில் பள்ளிப் படிப்பில் பத்தாண்டுகள் பாடத்திட்டத்தின் கீழ் பயிலும் எஸ்.எஸ்.எல்.சி. / ஓ.எஸ்.எல்.சி. மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பொதுத் தேர்வுகள், 12 ஆம் வகுப்பிற்கான மேனிலைப் பொதுத் தேர்வுகள் ஆகியன இவ்வியக்ககத்தினால் நடத்தப்படும் முக்கியத் தேர்வுகளாகும். மேற்காண் தேர்வுகளில் ஒன்று முதல் மூன்று வரையிலான பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு ஓராண்டு காலம் வீணாகாமல் மேல்படிப்பை உடனடியாகத் தொடரும் வகையினில் இப்பாடங்களில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் சிறப்புத் துணை பொதுத் தேர்வுகள் ஜூன் / ஜூலை மாதங்களில் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது.

மேற்காண் முக்கிய பொதுத் தேர்வுகளை நடத்துவதுடன் ஆண்டுதோறும் சுமார் 20 இலட்சம் மாணவர்களுக்கு 33 வகையிலான தேர்வுகளை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிடும் சீரிய பணியினை இத்துறை ஆற்றி வருகிறது.

பள்ளி மாணவர்கள் மற்றும் தனி மாணவர்களுக்கான தேர்வுகளை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிடுவதுடன் இத்தேர்வுகள் சார்ந்த கீழ்க்காண் திட்டப் பணிகளும் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. **அரசுத் பொதுத் தேர்வுகளில் எழுதிப் பெற்ற அசல் மதிப்பெண் சான்றிதழ்களை தொலைத்துவிட்ட / இழந்துவிட்ட மாணவர்களுக்கு சான்றிட்ட மதிப்பெண் நகல் வழங்குதல்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் பொதுத் தேர்வுகள் எழுதிப் பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களை தொலைத்துவிட்ட மாணவர்களுக்கு உடனடி உபயோகத்திற்கென சான்றிட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல் (CCM) வழங்குதல். |
| திட்டத்தின் குறிக்கோள் | தொலைக்கப்பட்ட அல்லது மீள பயன்படுத்த இயலாதவாறு சேதமடைந்து பயனற்றுப் போன அசல் சான்றிதழ்களுக்கு பதிலாக தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு ஏதுவாக அசல் சான்றிதழுக்கு இணையான சான்றிட்ட மதிப்பெண் நகல் வழங்கி மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு உதவுதல் |
| விண்ணப்பிப்பதற்கான தகுதி | இத்துறையினால் நடத்தப்படும் அரசுப் பொதுத் தேர்வுகளில் எழுதிப் பெற்ற அசல் மதிப்பெண் சான்றிதழ்களை தொலைத்துவிட்ட / இழந்துவிட்ட மாணவர்கள் தங்களின் உடனடித் தேவைக்கென விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக மட்டும். |
| விண்ணப்பித்தலுக்கான | இத்துறையினால் இலவசமாக வழங்கப்படும் சான்றிட்ட |

| | |
|---|---|
| விவரம் | மதிப்பெண் நகல் சான்றிதழ் கோரி விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து இழக்கப்பட்ட / தொலைக்கப்பட்ட சான்றிதழ் சார்ந்து கேட்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து, கடைசியாக பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து ஆளறிச் சான்றிதழ் பெறுவதுடன்-<br>1) முதல்முறையாக கோரப்படுதலுக்கு ரூ.305/- ம்<br>2) இரண்டாவது முறையாக கோரப்படுகிறதெனில் ரூ.405/- ஒவ்வொரு மதிப்பெண் சான்றிதழுக்கும் கட்டணமாக தேசிய மயமாக்கப்பட்ட எதாவதொரு வங்கியில் கட்டணத் தொகைக்கான கேட்பு வரைவோலை பெற்று இணைக்கப்பட வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | 1. 10 ஆம் வகுப்பு எஸ்.எஸ்.எல்சி- இணை இயக்குநர் (ப)<br>2. ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் தேர்வுகள்) ஓ.எஸ்.எல்.சி. - கூடுதல் செயலாளர்(மெ<br>3. மேனிலைத் தேர்வுகள் -இணை இயக்குநர் (மே.நி.)<br>4. தொழில்நுட்பத் தேர்வு -கூடுதல் செயலாளர்(தொ.நு.)<br>5. ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வுகள் -இணை இயக்குநர்(ப) |

2. **தொலைந்து போன அல்லது இழந்த மதிப்பெண் சான்றிதழ்களுக்கு பதிலாக இரண்டாம்படி / மறு பிரதிச் சான்றிதழ் (DUPLICATE) வழங்குதல்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இத்துறையினால் நடத்தப்படும் அரசு பொதுத் தேர்வெழுதி பெற்ற அசல் மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து போய் அல்லது சேதமடைந்த சூழ்நிலையில் இரண்டாம்படி அல்லது மறு பிரதி சான்றிதழ் வழங்குதல் . |
| திட்டத்தின் குறிக்கோள் | தொலைக்கப்பட்ட அல்லது மீள பயன்படுத்த இயலாதவாறு சேதமடைந்து பயனற்று போன அசல் சான்றிதழ்களுக்கு பதிலாக இரண்டாம்படி சான்றிதழ் வழங்கி மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு உதவுதல் |
| தகுதிகள் | சான்றிதழ் உண்மையாக தொலைக்கப்பட்டு அல்லது பயணற்ற நிலையில் சேதமமடைந்த பகுதியை வைத்துள்ள நபர்கள் மட்டுமே மறுபிரதி சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்தவர்கள் |
| விண்ணப்பிக்கும் முறை | பள்ளியில் பயின்ற மாணவர்களின் அசல் மதிப்பெண்சான்றிதழ் இழக்கப்பட்டால் அவர்கள் இரண்டாம்படி சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் போது இத்துறையினால் இலவசமாக வழங்கப்படும் உரிய விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து தாம் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பம் பெற்று உரிய கட்டணத்தை கிராமப்புற மாணவர்களாக இருப்பின் அரசு கருவூலம் அல்லது பாரத மாநில வங்கி கருவூலக் கிளையில் செலுத்தி, செலுத்த சீட்டுடன், அசல் சான்றிதழ் மீளப் பெற இயலாது , தொலைந்து போனது என தாம் வசிக்கும் இருப்பிடத்தின் காவல் நிலைய ஆய்வாளரின் சான்றிதழுடன் விண்ணப்பப் படிவத்தில் அசல் சான்றிதழ் தொலைந்து போனதை குறிப்பிட்டு வட்டாட்சியர் தகுதிக்கு குறையாத தகுதி உடைய அலுவலரின் சான்றிதழ் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.<br>தனித்தேர்வராக இருப்பின் உரிய விண்ணப்பத்தினை அரசுத் |

| | |
|---|---|
| | தேர்வுகள் இயக்ககத்தில் இருந்து நேடியாக பெற்று பூர்த்தி செய்தவுடன் கேட்டுள்ளபடி கட்டணம் செலுத்திய ரசீது மற்றும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்றிதழுடன் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அலுவலகத்தில் இயங்கும் பிரிவில் நேரடியாக ஒப்படைக்க வேண்டும். இவ்விண்ணப்பத்தில் உரிய இடத்தில் தாம் படித்த பள்ளி தலைமை ஆசிரியரால் சுருக்கொப்பம் இட வேண்டும், இயலாத நிலையில் தம் இருப்பிட முகவரிக்கு அருகாமையில் இயங்கும் பள்ளித் தலைமையாசிரியரால் சரிபார்த்து சுருக்கொப்பமிட வேண்டும் |
| கட்டண விபரம் | 1. இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் விண்ணப்பிக்க கட்டணம் ரூ.505/-<br>2. மூன்றாம்படி மதிப்பெண் சான்றிதழ் விண்ணப்பிக்கும் கட்டணம் 755/- |
| அணுக வேண்டிய அலுவலர் | 1. 10 ஆம் வகுப்பு எஸ்.எஸ்.எல்சி. இணை இயக்குநர் (ப)<br>2. ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேஷன் தேர்வுகள் கூடுதல் செயலாளர் (மெ)மற்றும் ஓ.எஸ்.எல்.சி.<br>3. மேனிலைத் தேர்வுகள் இணை இயக்குநர் (மே.நி) |

**3) அயல்நாடுகள் / உள்நாட்டில் பிறமாநிலங்களில் கல்வி பயிலவிருக்கும் மாணவர்களுக்கு இத்துறையினால் நடத்தப்பட்ட தேர்வுகள் சார்ந்து, இத்துறையினால் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பின் அவர்கள் இடம்பெயர்தலுக்கான (Migration Certificate) சான்றிதழ் வழங்குதல்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | அயல்நாடுகள் / உள்நாட்டில் பிறமாநிலங்களில் கல்வி பயிலவிருக்கும் மாணவர்களுக்கு இடம் பெயர்தலுக்கான சான்றிதழ் **(Migration Certificate)** வழங்குதல் . |
| திட்டத்தின் குறிக்கோள் | இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்று பயிலவிருக்கும் மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி / ஓ.எஸ்எல்.சி. / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் / மேனிலைத் தேர்வு சார்ந்த மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பின் இடம் பெயர்ந்து கல்வி கற்பதற்கு ஏதுவாக இடம் பெயர்தலுக்கான சான்றிதழ் வழங்குவது. |
| தகுதிகள் | இத்துறையினால் வழங்கப்பட்டிருக்கும் மேற்காண் சான்றிதழ்கள் பெற்றிருப்பின் இம்மாணவர்கள் இடம்பெயர்தலுக்கான சான்றிதழ் விண்ணப்பிக்க தகுதியுடையவராவார். |
| விண்ணப்பிக்கும் முறை | இத்துறையினால் வழங்கப்படும் உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தாம் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரின் கையொப்பம் பெற்று கல்வி தகுதிக்கான சான்றிதழ் நகலினை இணைத்து உரிய கட்டணம் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டுடன் விண்ணப்பிக்க வேண்டும். |
| கட்டண விபரம் | இச்சான்றிதழ் பெறுவதற்கான கட்டணமாக ரூபாய்.505/-ஐ |

| | |
|---|---|
| | ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து அரசுத் தேர்வுகள் இயக்குநரின் பெயரில் கேட்பு வரைவோலை பெற்று இணைக்க வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | அரசுத் தேர்வுகள் துறை துணை இயக்குநர். |

**4) எஸ்.எஸ்.எல்.சி. / ஓ.எஸ்.எல்.சி. / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் மேல்நிலை தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களுக்கு மறுகூட்டல் (Retotalling) விண்ணப்பித்தல்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இத்துறையினால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகள் சார்ந்த விடைத்தாட்களில் விடைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மதிப்பெண்கள் சரியானவையா என்பதற்கு மறுகூட்டல் (Retotalling) கோரி விண்ணப்பித்தல். |
| திட்டத்தின் குறிக்கோள் | தேர்வெழுதும் மாணவர்களின் விடைத்தாட்களில் வினாவாரியாக அளிக்கப்பட்டுள்ள விடைகளுக்கு விடுபடாமல் மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளதா, பக்கவாரியாகவும், வினாவாரியாகவும் மதிப்பெண்களின் கூடுதல் முதல் பக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளதா, மொத்த மதிப்பெண்கள் எடுத்து எழுதும் போது சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தல். |
| தகுதிகள் | இத்துறையினால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தேர்வு சார்ந்த முடிவுகள் வெளிவந்தவுடன் அனுமதிக்கப்பட்ட நாட்களுக்குள் மறுகூட்டலுக்காக விண்ணப்பிப்பவராக இருக்க வேண்டும். |
| விண்ணப்பிக்கும் முறை | இத்துறையினால் வழங்கப்படும் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து இதற்கென செலுத்த வேண்டிய கட்டணத் தொகை செலுத்தியதற்கான கேட்பு வரைவோலை இணைப்பதுடன் இணையதளம் (Internet) மூலம் பெற்ற மதிப்பெண் பட்டியலின் நகலையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். |
| கட்டண விபரம் | எஸ்.எஸ்.எல்.சி. / ஓ.எஸ்.எல்.சி. / மெட்ரிகுலேசன் / ஆங்கிலோ-இந்தியன் மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கு<br><br>1) ஒரு தாள் கொண்ட பாடமாக இருப்பின் ரூ . 205/-<br>2) இரண்டு தாள் கொண்ட பாடமாக இருப்பின் ரூ. 305/-<br><br>மேற்காண் கட்டணத் தொகையினை ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து அரசுத் தேர்வுகள் இயக்குநரின் பெயுரில் கேட்பு வரைவோலை பெற்று இணைக்க வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் |

**5. இத்துறையினால் நடத்தப்படும் மேனிலைப் பொதுத் தேர்வுப் பாடங்களான, கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் கணினி அறிவியல்**

**பாடங்களுக்கான தேர்வு எழுதிய விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் (Xerox) வழங்குதல்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மேனிலை பொதுத் தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் கணினி அறிவியல் பாடங்களுக்கான விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் வேண்டி விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும். மேற்காண் பாடங்களுக்கான விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் (**Xerox**) வழங்குதல். |
| திட்டத்தின் குறிக்கோள் | தேர்வெழுதும் மாணவர்களின் விடைத்தாட்களில் வினாவாரியாக அளிக்கப்பட்டுள்ள விடைகளுக்கு விடுபடாமல் மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளதா, பக்கவாரியாகவும், வினாவாரியாகவும் மதிப்பெண்களின் கூடுதல் முதல் பக்கத்தில் கொண்டு வரப்பட்டுள்ளதா, மொத்த மதிப்பெண்கள் எடுத்து எழுதும் போது சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்தல். |
| விண்ணப்பிப்பதற்கான தகுதி | நடந்து முடிந்த மேனிலைப் பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்பட்டவுடன் 5 வேலை நாட்களுக்குள் மேற்காண் பாடங்களுக்கு மட்டும் அதற்கான தேர்வெழுதிய விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் கோரும் மாணவர்களுக்கு மட்டும். |
| விண்ணப்பிப்பதற்கான விவரம் | மேற்காண் பாடங்களுக்கான விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் கோரும் மாணவர்கள் மேனிலைத் தேர்வு முவுவு அறிவிக்கப்பட்டவுடன் 5 வேலை நாட்களுக்குள் இத்துறையினால் வழங்கப்படும் உரிய விண்ணப்ப படிவத்தினை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்களிலும், சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் மற்றும் அதன் மண்டல அலுவலகங்களிலும் பெற்று பூர்த்தி செய்து ஒரு பாடத்திற்கு ஜெராக்ஸ் நகல் வழங்க உரிய கட்டணத்தை ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு வரைவோலையாக பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். |
| கட்டண விபரம் | ஒரு பாடத்திற்கு ஜெராக்ஸ் நகல் வழங்க கட்டணமாக ரூபாய் 275/- க்கு ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கேட்பு வரைவோலையாக பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். |
| அணுக வேண்டிய அலுவலர் | இணை இயக்குநர் |

**5. மேல்நிலைப் பொதுத் தேர்விற்கான அதிமுக்கியத்துவம் வாய்ந்த பாடங்களான கணிதம், இயற்பியல், வேதியியல் உயிரியல் , விலங்கியல், தாவரவியல், மற்றும் கணினி அறிவியல் ஆகிய 7 பாடங்களுக்கான விடைத்தாட்கள் மறுமதிப்பீடு (REVALUATION) செய்தல் .**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மேல்நிலைத் தேர்வு, மருத்துவம் பொறியியல், கணினி அறிவியல் துறை சார்ந்த 7 பாடங்களுக்கான விடைத்தாட்கள் மறுமதிப்பீடு செய்தல் |
| திட்டத்தின் குறிக்கோள் | இத்துறையினால் நடத்தப்படும் பொதுத் தேவுகள் சார்ந்த பாடங்களின் விடைத்தாட்களில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விடைகளுக்கு உரிய மதிப்பெண்கள் |

| | |
|---|---|
| | அனைத்து தரப்பினருக்கும் பாரபட்சமின்றி வழங்கப்படுகிறது என்ற நம்பகத்தன்மையினை மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் உணர்த்துதல், மற்றும் விடைத்தாள்கள் திருத்துவதில் ஒளிவு, மறைவு அற்ற தன்மையினை நிலைப்படுத்தல். |
| தகுதிகள் | இத்துறையினால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளில் குறிப்பிட்ட பாடத்தில் அதிகப்படியான மதிப்பெண்களை எதிர்பார்த்து ஒருவேளை கூடுதலான மதிப்பெண்கள் கிடைக்கக்கூடும் என தீர்மானித்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக. |
